ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2116/30 - 2019 මාර්තු මස 26 වැනි අඟහරුවාදා - 2019.03.26
2116/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு எஹலியகொடை புதிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர் உள்வாயினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர்கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இலக்கம் : 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2019, மாச்சு 13.
5/2/2/1456.

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தின், தெஹியோவிட பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 124C, கலபலன கந்த கிராம அலுவலர் பிரிவில், மாநியங்கம கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். டி. ஏ. ஜயலத் குமார அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள திட்டப்பட இலக்கம் 985 இன் துண்டு இலக்கம் 02 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாகஹஹேன என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 60 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : *சீதாவக கங்கை;*
கிழக்கு : *சீதாவக கங்கை;*
தெற்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 04;
மேற்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திரு. கலபலன்னலாகே விமலசேன,
568/4, பஹல மாநியங்கம,
அவிஸ்சாவலை,
கேகாலை.

*4 - 303*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சேகரிப்புத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை எடுத்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர்கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இலக்கம் : 35, லக்திய மெதுர,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2019, மாச்சு 13.
5/2/2/1457.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தின், றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 103A, மொரலிய கிராம அலுவலர் பிரிவில், தெவெக்கன்த கிராமத்தில் அமைந்துள்ள - றுவன்வெல்லவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 40 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு: குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் றுவன்வெல்ல வத்த;
கிழக்கு: தோட்ட வீதி மற்றும் குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி;
தெற்கு: குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி;
மேற்கு: குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

பிரதம நிறைவேற்று அதிகாரி,
மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம்,
இலக்கம் 280,
டேம் வீதி, கொழும்பு 12.

*4 - 304*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.